# பத்திரிக்கை செய்தி

## பட்டா மாறுதல் செய்து தர ரூ.2,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய கிராம நிர்வாக அலுவலர் கைது

புகார்தாரர் திரு.வேல்முருகன், ஐயப்பநாயக்கன்பேட்டை, வாங்குடி கிராமம், உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் பட்டா மாறுதல் வேண்டி வாங்குடி கிராம நிர்வாக அலுவலகம், உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டத்தில் விண்ணப்பித்துள்ளார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.புகழேந்தி, கிராம நிர்வாக அலுவலர், வாங்குடி கிராமம், உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.2,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அரியலூர் மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 28.01.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.புகழேந்தி, கிராம நிர்வாக அலுவலர், லஞ்ச பணம் ரூ.2,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.